மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவப் படி ரூபாய் 10,000/-லிருந்து 12,000/- ரூபாயாக இந்த நிதியாண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.18 இலட்சத்து 86 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

6. அறிவிப்பு

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[2013 மே 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2013) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*